**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 118/2021**
**நாள்.10.04.2026**
**பி.வா.சா.1- P.K.முருகன்**
**த/பெ - கிருஷ்ணமூர்த்தி**
**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் ராமசாமிநகரில் குடியிருந்து வருகிறேன். நான் 2005 லிருந்து மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். 2005 ம் ஆண்டிலிருந்து மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வரவில்லை என்பதால் தான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வாதி அனுபவித்து வரும் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும். எரியோடு கிராமம், ராமசாமிநகரில் உள்ள 73 வீடுகள் சர்வே எண்.1091, 1092, 1093 ல் உள்ளன என்றால் சரிதான்.

3. மேற்கண்ட வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுமனை பட்டாக்கள் என்பது அரசாங்கத்தால் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றால் சரிதான்.

4. வாதி குடியிருக்கும் பகுதியில் உள்ள அனைத்து வீட்டுமனைகளும் அரசாங்கத்திற்கு சொந்தமானவை என்றால் சரிதான்.

5. வாதி அனுபவித்து வரும் வீட்டை பொறுத்து எக்காலத்திலும் எனக்கு சட்டப்படியான உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரிதான்.

6. நான் மருத்துவர் சமூக சங்கத்தின் செயலளாராக பணிபுரிந்து வருகிறேன் என்று பதிலறிவிப்பு, எதிர் வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் செயலாளராக பணியாற்றி வரும் மருத்துவர் சமூக சங்கம் முறையாக சட்டப்படி பதிவு செய்யப்பட்ட சங்கம் இல்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவர் சமூக சங்கம் எந்த முகவரியில் உள்ளது என்று பதிலறிவிப்பு, எதிர் வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

7. வாதி அனுபவித்து வரும் வீடு எங்களுடைய மருத்துவர் சமூக சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. எனக்கோ, நான் செயலாளராக பணியாற்றி வரும் மருத்துவர் சமூக சங்கத்திற்கோ வாதி அனுபவித்து வரும் வீட்டின் மீது எக்காலத்திலும் சட்டப்படியான உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்பதால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும்ட வா.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள நபர் வாதி சண்முகராணி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வீடு தான் பிராது சொத்து என்றால் சரிதான். அதை வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, மாதம் இரு முறை வந்து போவார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளபடி பிராது சொத்து வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த மின் இணைப்பு எண்.583 என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதி, வாதியின் கணவர், அவர்களது மகள் உள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தான வீட்டிற்கு தேவையான தண்ணீருக்கு சின்டெக்ஸ் உள்ளது என்றால் சரிதான். மரம், செடி, கொடிகள் வைத்து வாதி வளர்த்து வருகிறார் என்றால் அவரது தந்தை வளர்த்து வருகிறார். மேற்படி மரம், செடி, கொடிகளை வாதியின் தந்தை தான் வளர்த்து வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. பிராது சொத்தில் உள்ள மரம், செடி, கொடிகளை வாதியின் தந்தை தான் வளர்த்து வருகிறார் என்று பதிலறிவிப்பிலோ, எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வீடு வாதியால் கட்டப்பட்டது என்றும், அதில் உள்ள மரம், செடி, கொடிகளை வாதிதான் வளர்த்து வருகிறார் என்றும் போன்ற விவரங்களை தெரிந்துகொண்டு அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை படித்து பார்த்துள்ளேன்.

14. தமிழ் எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பதிலறிவிப்பு, எதிர் வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் கூறினேன்.

15. தாவா பிராதை படித்து பார்த்துள்ளேன். தாவா பிராதின் பக்க எண்.2, பாரா எண்.5 ல் வாதி 2008ம் ஆண்டு வீடு கட்டி அதில் அனுபவம் செய்துவருகிறார் என்று குறிப்பிட்டுள்ள விவரத்தை படித்து பார்த்தேன். அது பொய்யான விவரம் ஆகும்.

16. தாவா பிராதின் ஆவணப்பட்டியல் விவரத்தில் 4வது ஆவணத்தில் எரியோடு கிராம நிர்வாக அலுவலர் 12.07.2021ம் தேதி பிராதை சொத்தை பார்வையிட்டு தாவா சொத்தை வாதியும், வாதியின் குடும்பத்தாரும் அனுபவித்து வருவதாக உள்ள ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அது பொய்யான தகவல்.

17. மேற்படி ஆவணம் பொய்யான ஆவணம் என்று எதனடிப்படியில் கூறுகிறேன் என்றால் ஆவணத்தை நான் பார்க்கவில்லை.

18. 12.07.2021ம் தேதி எரியோடு கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்தை பார்வையிட்டு வழங்கிய ஆவணம் உண்மையான ஆவணம் என்றாலும், வழக்கிற்காக பொய்யான ஆவணம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

19. வாதி அனுபவித்து வரும் வீட்டிற்கான நான்குமால் தென்வடல் பாதைக்கு கிழக்கு, பிளாட் எண்.17க்கு மேற்கு, பிளாட் எண்.33க்கு வடக்கு, கிழமேல் பாதைக்கு தெற்கு என்றால் சரிதான்.

**20. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளபடி பிராது சொத்து வீட்டிற்கான நான்குமால் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்திய சாட்சியசட்டம் பிரிவு 65(பி)ன் படி சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்கண்ட ஆவணம் குறியீடு செய்ய கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது, ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

21. பிராதில் சொல்லப்பட்டுள்ள பிராது சொத்திற்கான நான்குமாலும், வா.சா.ஆ.8ன்படி உள்ள நான்குமாலும் ஒன்று தான் என்றால் சரிதான்.

22. வா.சா.ஆ.8ன்படி உள்ள சொத்தை வாதி கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் அதில் அவர் குடியிருக்கவில்லை.

23. வாதி 2008ம் ஆண்டில் இருந்து தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்பது எனக்கு நன்கு தெரியும், ஆனால் வழக்கிற்காக குடியிருக்கவில்லை என்று

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

24. நான் தாவா வழக்கை மருத்துவர் சமூக சங்கத்தின் செயலளார் எனும் தகுதியின் அடிப்படையில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

25. 07.10.2021ம் தேதியில் நான் அனுப்பிய பதிலறிவிப்பில் நான் மருத்துவர் சமூக சங்கத்தின் செயலளார் எனும் அடிப்படையில் பதிலறிவிப்பை அனுப்பியதாக வாசகம் இல்லை என்றால் சரிதான்.

26. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் மருத்துவர் சமூக சங்கத்தின் செயலளார் எனும் நிலையில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

27. நான் அனுப்பிய பதிலறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் நான் தனிப்பட்ட முறையில் இவ்வழக்கில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

28. நான் செயலளாராக இருக்கும் மருத்துவர் சமூக சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கம் என்பதற்கான பதிவு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

29. உண்மையிலேயே எரியோட்டில் மருத்துவர் சமூக சங்கம் இல்லை என்றாலும், அப்படி இருந்திருந்தால் அது பதிவு செய்யப்பட்டு, அதற்கான பதிவு எண் உள்ள பதிவு சான்றை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, மருத்துவர் சமூக சங்கம் உள்ளது.

30. மருத்துவர் சமூக சங்கத்தின் முகவரியானது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி எதிரில், மருத்துவர் உறவின்முறை சங்க கட்டிடம், எரியோடு-திண்டுக்கல் ரோடு முகவரியில் உள்ளது.

31. மருத்துவர் சமூக கட்டிடமானது சர்வே எண்.608ல் உள்ளது. ஆனால் சர்வே எண்.608ல் தான் மருத்துவர் சமூக சங்கம் இயங்கி வருகிறது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

32. நான் சொல்வது போன்று எரியோட்டில் மருத்துவர் சமூக சங்கம் இல்லை என்பதால் தான் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

33. வாதிக்கு அரசு வழங்கியுள்ள பட்டாவை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது அப்பா கிருஷ்ணமூர்த்தி, அம்மா மாரியம்மாள். எனது அம்மா பெயரில் மனை

எண்.63 க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மாவின் இறப்பிற்கு பின்பு மேற்படி மனை எண்.63 க்கான பட்டாவை என் மனைவி பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் சரிதான்.

34. மனை எண்.63 க்காக நான்குமால் தெற்கு - வீதி, வடக்கு - பாப்பாத்தியம்மாள் வீடு, கிழக்கு - அன்னலட்சுமி வீடு, மேற்கு - ரகுநாதன் வீடு. மேற்படி நான்குமாலுக்கு கட்டுப்பட்ட வீடு தான் எங்களுக்கு பாத்தியம் என்றாலும், அது என் மனைவி பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். என் மனைவி தாமரைக்கனி.

35. என் மனைவி தாமரைக்கனி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவானது மனை எண்.25 க்கான பட்டா என்றால் மனை எண்.63 க்கான பட்டா என் மனைவி பெயருக்கு மாற்றும்போது உட்பிரிவு செய்யப்பட்டு மாற்றப்பட்டது. அதற்கான மனை எண்.25 அல்ல. அதற்கான சர்வே எண்.1093/25.

36. முதலில் பட்டா கொடுக்கப்பட்டு, அனுபவித்து வந்த பின் மீண்டும் பட்டா வழங்கும் போது உட்பிரிவு செய்து இரண்டாவது முறை பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ன்படி 06.10.2023 ம் தேதியிட்டு 3 ம் பிரதிவாதியால் வாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தில் பட்டா என்று குறிப்பிடவில்லை, மாறாக அனுபந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

37. வா.சா.ஆ.6 ன்படி தான் வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

38. 24.12.2018 ம் தேதியே வாதி அனுபவித்து வரும் பிராது சொத்தான வீட்டிற்கு பட்டா வழங்கக்கோரி மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலருக்கு மனு கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் தெரியும், அதனால் பட்டா வழங்கக்கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தேன். எதற்கு ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் வாதி ஈரோட்டில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாலும், அவருக்கு அங்கு வீடு உள்ளதாலும் பட்டா வழங்கக்கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தேன்.

39. வாதி பட்டா கோரி மனு கொடுத்தபின்பு கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், நில அளவையர் ஆகியோர் தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து

பொழிமால் செய்து வாதியின் அனுபவத்தை உறுதி செய்தபின்பு தான் வாதியின் பேரில் பட்டா அளிப்பதாக உறுதி அளித்து சென்றார்கள் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

40. முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து பட்டாகோரி வாதி தாக்கல் செய்த மனுவிற்கு, வாதி குடியிருந்து வரும் இடம் எரியோடு பேரூராட்சி என்பதால் ஒருமுறை சிறப்புதிட்டத்தின் கீழ் வாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்படும் என்று கொடுக்கப்பட்ட பதிலறிவிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

41. நான் செயலளாராக பணிபுரிந்து வரும் மருத்துவர் சமூக சங்கமானது சட்டப்படி பதிவு செய்யப்படாத சங்கம் என்பதால் அச்சங்கத்தில் செயாலாளர் எனும் நிலையில் நான் செய்து வரும் எதிர்வாதம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

42. ஒரே பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இருக்கலாம் என்றால் சரிதான். ஈரோட்டில் இருக்கும் கண்ணதாசன் மனைவி சண்முகராணி என்பவர் வேறு, தாவா வழக்கின் வாதி சண்முகராணி வேறு என்றால் சரியல்ல.

43. ஈரோட்டில் இருக்கும் கண்ணதாசன் மனைவி சண்முகராணி தான் வாதி சண்முகராணி என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வாக்களார் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேன்.

44. மேற்படி வாக்களார் அடையாள அட்டை சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

45. நான் தாக்கல் செய்துள்ள வாக்களார் அடையாள அட்டையில் உள்ள சண்முகராணி என்பவர் வாதி சண்முகராணி இல்லை என்றால் சரியல்ல.

46. வாதிக்கோ, அவரது கணவருக்கோ நாளது தேதிவரை எந்த சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல, சொத்துக்கள் உள்ளன. அதை நிரூபிக்க பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

47. 09.04.2026ம் தேதியிட்ட வில்லங்க சான்றில் Column No.4ல் கிரைய ஆவண எண்.7289/2021ன்படி 25.11.2021ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி வாதி தான் வாங்கியிருந்த கடனை கட்ட முடியாததால் அவர் பெயரில் இருந்த சொத்தை மேனகா என்பவருக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேனகா வாதியின்

கணவரான கண்ணதாசனின் அக்கா ஆவார். மேனகா வாதியின் கணவரான கண்ணதாசனின் அக்கா என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

48. மேனகாவிடம் பெற்ற கடனை அடைக்க முடியவில்லை என்பதால் தான் வாதி தன் பெயரில் இருந்த சொத்தை மேனகாவின் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

49. பி.வா.சா.ஆ.3ன் படி வாதியின் பெயருக்கு பட்டா வழங்கபடவில்லை என்பதற்கான விவரத்தை தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் தகவல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

50. 06.04.2023ம் தேதியிலேயே தாவா சொத்திற்கான பட்டா வாதியின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், பி.வா.சா.ஆ.3ன்படி தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3ன்படி தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் அதைபொறுத்து மேல்முறையீடு தான் செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

51. வாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டதை மறைத்து பி.வா.சா.ஆ.3ன்படி தகவல் வழங்கியுள்ள அதிகாரியுடன் கூட்டுசதி செய்து தவறான தகவல் வழங்கவேண்டும் என்று கூறி மேற்படி தகவல் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

52. மருத்துவர் சமூக சங்கம் செயல்படவில்லை என்பதால் தான் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், தீர்மானம் அதற்கென பராமரிக்கப்படும் ஆவணத்தில் உள்ளது. அதற்குரிய Extract பெறப்பட்டு உண்மை நகல் என்று தலைவர் மேற்குறிப்பு செய்துள்ளார்.

53. மருத்துவர் சமூக சங்கம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் அதற்கு மூல ஆவணம் இல்லாத நிலையில் நாங்கள் பி.வா.சா.ஆ.1 யை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

54. பி.வா.சா.ஆ.2 நகல் என்பதால் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல, அது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

55. பட்டாவில் தவறு இருந்தால் அதில் திருத்தம் மேற்கொள்வதற்கான அதிகாரம் வட்டாட்சியருக்கு உள்ளது. தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றாலும், அவர் அனுபவித்து வருகிறார் என்றாலும், மருத்துவர் சமூக சங்கத்தின் தலைவர், செயலர், பொருளர் என்ற நிலையில் தாவா சொத்தை JCP வைத்து அகற்றி விட்டு எங்களுக்கு வேண்டிய நபருக்கு கொடுக்க வேண்டும் என்பதற்கு வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**56. ராமசாமிநகரில் முருகன் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மேற்படி முருகன் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்திய சாட்சியசட்டம் பிரிவு 65(பி)ன் படி சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்கண்ட ஆவணம் குறியீடு செய்ய கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது, ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

57. மேற்படி முருகன் கோவிலுக்கு தென்புறத்தில் 44 செண்ட் இடம் உள்ளது. அதற்கு உட்பட்டு முருகன் கோவில் உள்ளது என்றாலும், அதில் விளையாட்டு மைதானம் உள்ளது என்றாலும் சரிதான். அதில் சின்டெக்ஸ் டேங்க் உள்ளது என்றாலும் சரிதான்.

58. மேற்படி 44 செண்ட் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், மேல்நிலைதொட்டிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வாதி வீடு கட்டியுள்ளார்.

59. வாதி கட்டியுள்ள இடமானது மேல்நிலை நீர்தேக்கதொட்டிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணம் அரசு தரப்பில் இருந்து எங்கள் சங்கத்திற்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல, பேரூராட்சியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அப்படி ஒரு ஆவணம் வழங்கப்படவில்லை என்பதால் தான் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

60. குறுக்கலையான் பட்டியில் ஒரு அங்கன்வாடி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். குறுக்கலையான் பட்டிக்கும், எங்கள் ஊருக்கும் சுமார் 150 மீ தூரம் இருக்கும்.

61. தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருவதை உறுதி செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும், அது பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் என்று பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

62. மருத்துவர் சங்கத்தில் உள்ளவர்கள் வாதி அனுபவித்து வரும் வீட்டை JCP கொண்டு அகற்றி விடுவோம் என்று மிரட்டியதால் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

63. பதிவு செய்யப்படாத சங்கத்தில் இருந்து நான் மேற்கொண்டுவரும் எதிர்வாதம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**